இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாணத் தாயின் அன்பு மக்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பின் ஈஸ்டர் வாழ்த்துக்களை தெரிவித்து ஆசி வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

இந்த இதழ் விசுவாச ஆண்டு சிறப்பிதழாக வெளிவருகிறது. நமது திருச்சபை இந்த ஆண்டை விசுவாச ஆண்டாக அறிவித்துள்ளதை நாம் அனைவரும் அறிவோம். விசுவாசம் கிறிஸ்தவர்களின் சுவாசம் மூச்சுக் காற்று) ஆகும். விசுவாசம் இன்றி எவரும் இறைவனுக்கு ஏற்புடைய மக்களாக வாழ இயலாது. விசுவாசம் என்னும் இறைநம்பிக்கையை நமக்குள் உருவாக்குபவர் இறைவனே. அதை பெருகச் செய்பவரும் இறைவனே. ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார். ஆபிரகாமின் வழித்தோன்றல்களாகிய நாமும் அவரைப் போலவே நம்பிக்கையில் தளராது இருப்போம்.

இறைவார்த்தைகளை தியானிக்கும் போது விசுவாசம் பெருகி வளர்கிறது. நம் குழந்தைகளுக்கு நற்செய்தி என்னும் ஆன்மீக உணவை ஊட்டி வளர்ப்போம். திருக்கல்யாணத் தாயும் விசுவாசம் என்னும் செல்வத்தை நமக்கு அருளும் தாயாக விளங்குகிறார். ஈஸ்டர் பெருவிழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இந்நாட்களில் நாம் ஆண்டவருடைய உயிர்ப்புக்கு சாட்சி பகரும் விசுவாசிகளாக வாழ முற்படுவோம்.

ஒவ்வொரு முதல் சனிக்கிழமைதோறும் திருக்கல்யாண அன்னையின் திருமுகத்தைக் காண ஆவலோடு திரண்டுவரும் அன்புப் பிள்ளைகளை இருகரம் கூப்பி வரவேற்கிறேன். உங்கள் எல்லோருடைய உள்ளங்களிலும் இல்லங்களிலும் இறையாசி பெருகிவர வாழ்த்துகிறேன். திருக்கல்யாண அன்னையைப் போல நாமும் விசுவாச வாழ்விற்கு சான்று பகர்வோம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

**பங்குத் தந்தை**

பொத்தக்காலன்விளை.

# உலகத் திருச்சபை

## செய்திகள்



**கத்தோலிக்க திருச்சபையின் 266வது தலைவர் :**

புதிய போப் ஆண்டவர் பிரான்ஸிஸ், அரஜெண்டினா நாட்டின் தலைநகரான பியூனஸ் அயர்ஸ் நகரில் மேரியோ ஜோஸ் -ரெஜினா , மேரியோ தம்பதியரின், 5 பிள்ளைகளில் ஒருவராக 1936 -ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி பிறந்தவர். ரசாயனத்தில் முதுநிலை பட்டம் பெற்றவர். பின்னர் இறையியல் கல்வி பயின்று இறையியல் பட்டம் பெற்றார்.

1969-ம் ஆண்டு குருவாக திருநிலை படுத்தப்பட்டார்.

1998-ம் ஆண்டு பியூனஸ் அயர்ஸ் ஆர்ச் பிஷப் ஆனார்

2011-ம் ஆண்டு கர்தினால் ஆக உயர்ந்தார்

இவருடைய தாய்நாடு இத்தாலி. இவரது தந்தை ரெயில்வே ஊழியராக பணியாற்றியவர். கடந்த முறை போப் 16-ம் பெனடிக்ட் தேர்வு செய்யப்பட்டபோது, இவருக்கு இரண்டாவது இடம் கிடைத்தது.

புதிய போப் ஆண்டவர் எளிமையான வாழ்க்கைக்கு சொந்தகாரர். இத்தாலியை சேர்ந்த துறவி செயின்ட் பிரான்ஸிஸ் மீது கொண்ட நேசத்தின் காரணமாகவே இவர் தன்னை போப் ஆண்டவர் பிரான்ஸிஸ் என அழைக்குமாறு கூறியுள்ளார்.செயின்ட் பிரான்ஸிஸ் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்தாலும் அதைக் கைவிட்டு சமாதானம், வறுமை, எளிமை ஆகிவற்றின் சின்னமாக வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய போப் ஆண்டவர் பிரான்ஸிஸ் , எளிமையான ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்தவர் ஆவார். தனது பணிகளைக் கவனிக்க பஸ்சில் தான் பெரும்பாலும் பயணம் செய்து வந்துள்ளார் ,தனது உணவை தானே சமைத்து சாப்பிட்டு வந்துள்ளார், பியூனஸ் அயர்ஸ் நகரை சுற்றிலும் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளுக்கு சென்று , அந்த மக்களின் வாழ்க்கை முன்னேற்றம் அடைவதில் முக்கிய பங்கு வகித்தவர்.

**போப் வேண்டுகோள்**

புதிய போப் ஆண்டவராக தேர்வு செய்யப்பட்டவுடன் அவர் செயின்ட் பீட்டர் தேவாலயத்தின் பால்கனியில் தோன்றி பேசினார். அப்போது அவர் நீங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பு செய்ய செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பம். நீங்கள் அனைவரும் எனக்காக தலை தாழ்த்தி பிரார்த்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தொடர்ந்து அவர் முன்னாள் போப் ஆண்டவர் 16-ம் பெனடிக்ட்டுடன் தொலைபேசியில் பேசினார்

புதிய போப் ஆண்டவராக ஜார்ஜ் மேரியோ பெர்கோக்லியோ தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை அர்ஜெண்டினாவில் மக்கள் கோலாகலமாக கொண்டாடினர், சாலைகளில் வாகனங்களை ஓட்டுபவர்கள் ஒலிப்பானை அழுத்தி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

-நன்றி : வத்திக்கான் வானொலி

# மறை மாவட்ட செய்திகள்



01.03.2013 அன்று காலை கீழ ஏரல் சலேசியன் சகோதரிகள் மெட்ரிகுலேஷன் பள்ளியில் மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.

02,03-02-2013 ஆகிய இரண்டு நாட்களும் மேதகு. ஆயர் அவர்கள் இரத்தினபுரம் பங்கு மக்களைச் சந்தித்தார்கள்.

03.02.2013 அன்று மாலை வடக்கன்குளத்தில் மறைமாவட்ட தவக்கால திருப்பயண திருப்பலி மேதகு .ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

04.03.2013 அன்று மேதகு ஆயர் அவர்கள் மறைமாவட்ட குருக்களை சந்தித்து உரையாடினார்கள்.

06.03.2013 அன்று மாலை குறுக்குச்சாலையில் உறுதிப்பூசுதல் திருப்பலி மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

07.03.2013 அன்று மேதகு ஆயர் அவர்கள் மறைமாவட்ட குருக்களை சந்தித்து உரையாடினார்கள்.

08,09,10-03-2013 ஆகிய மூன்று நாட்களும் மேதகு ஆயர் அவர்கள் ஏர்வாடி பங்கு மக்களை சந்தித்தார்கள்.

12.03.2013 அன்று காலை மறைமாவட்டக் கல்விக் குழு கூட்டமும் அன்று மாலை மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலரின் கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

13.03.2013 அன்று மாலை மறைமாவட்ட நிதிக்குழு கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

16,17-03-2013 ஆகிய இரு நாட்களும் மேதகு ஆயர் அவர்கள் அடைக்கலாபுரம் பங்கு மக்களை சந்தித்தார்கள்.

17.03.2013 அன்று மாலை தவக்கால திருயாத்திரை பனிமயமாதா ஆலயத்தில் துவங்கி திரு இருதயங்களின் பேராலயத்தில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

19.03.2013 அன்று மாலை புனித சூசையப்பர் திருவிழா திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் முதியோர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது.

24.03.2013 அன்று குருத்து ஞாயிறு திருப்பலி மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

26.03.2013 அன்று தூத்துக்குடியில் வைத்து குருக்களுக்கான தவக்கால தியானமும், புனித எண்ணெய் மந்திரிப்பு திருப்பலியும் மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

27.03.2013 முதல் 31.03.2013 முடிய புனித வார வழிபாடுகள் மற்றும் உயிர்ப்பு பெருவிழா திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நன்றி- **மறைமாவட்ட செய்திகள்**

# பங்குச் செய்திகள்



**02.03.13** முதல் சனி வழிபாடு மற்றும் ஊர் பொது அசனம் நடைபெற உதவிய அனைத்து பொதுமக்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும் பங்குத்தந்தை திருப்பலியில் நன்றி தெரிவித்தார்.

**03.03.13** திருப்பலி முடிந்ததும் மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியருக்கு விளையாட்டு போட்டி நடந்தது. 17.03.2013 அன்று திருப்பலி முடிந்ததும் இளையோர் மறைக்கல்வி போட்டி மற்றும் தனி நபர் நடிப்பு போட்டி நடத்தப்பட்டது. அன்று மாலை 03.00 மணிக்கு பெற்றோர் மறைக்கல்வி வினாடி-வினா போட்டி நடைபெற்றது.

**10.03.13** அன்று நமது பங்கில் இருந்து இரண்டு பஸ்களில் தவக்காலத் திருப்பயணம் 14 கோவில்களுக்கு சென்று வந்தார்கள்.திருப்பயணம் நன்றாக இருந்ததாக மக்கள் பாராட்டினார்கள்.

**17.03.13** அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மணப்பாடு மற்றும் உவரி வட்டார வின்செண்ட் தி பவுல் உறுப்பினர் 150 பேருக்கு நமது பங்கில் வைத்து ஒரு நாள் தியானம் நடைபெற்றது. அருட்திரு உபர்ட்டஸ் , அருட்திரு.போஸ்கோ, அருட்திரு.பபியோன் மறைசிந்தனை மற்றும் பாவ சங்கீர்த்தனம் வழங்கி வழி நடத்தினார்கள்.

**24.03.13** குருத்து ஞாயிறு அன்று நமது ஊரின் பாரம்பரிய படி தேரோட்ட வீதி வழியாக குருத்தேலைப் பவனி நடைபெற்றது.

வருகின்ற கல்வி ஆண்டு முதல் நமது ஊர் துவக்கப்பள்ளியில் **L.K.G, U.K.G** வகுப்புகள் ஆரம்பமாக இருக்கின்றன, சிறந்த ஆசிரியர்களை கொண்டு வகுப்புகள் நடத்தப்பட இருக்கின்றன.எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வெளியூர்களுக்கு அனுப்பாமல் இந்த வகுப்புகளை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

## தவக்காலத் தியானம்

நமது பங்கு அளவில் 20.03.2013 புதன்கிழமை நவமுதலூர் இறைமக்களுக்கும், 21.03.2013 வியாழக்கிழமை கொழுந்தட்டு இறைமக்களுக்கும் ,24.03.2013 ஞாயிற்றுகிழமை பொற்பை இறைமக்களுக்கும்,25.03.2013 திங்கள்கிழமைபள்ளி மாணவ மாணவியர்களுக்கும் தவக்கால சிறப்புத் தியானங்கள் நடைபெற்றன.

## புதிய பங்கு உதயம்

**வருகின்ற மே மாதம் அல்லது ஜூன் மாதம் நமது கிளை பங்கு கொழுந்தட்டு மேதகு.ஆயர் அவர்களால் புதிய பங்காக உதயமாக உள்ளது.**

**-பங்குத்தந்தை**

## பொன் விழா நாயகர்

## அருட்தந்தை **பீற்றர் ராஜா**

27.03.2013 அன்று குருத்துவ அருள்வாழ்வில் தனது 50 ஆண்டுகளை நிறைவு செய்து பொன்விழா காணும் எம் பாசமிகு தந்தை பீற்றர் ராஜா அவர்களை வாழ்த்தும் வேளையில் அவர்கள் கடந்து வந்த 50 ஆண்டு கால குருத்துவ பணியை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தந்தை அவர்கள் 05.04.1932 அன்று அந்தோணிமுத்து நாடார்-ராஜகன்னி மரியாள் என்ற தம்பதியருக்கு மகனாக பிறந்தார். தந்தை அவர்களின் விடாமுயற்சியால் குருமடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார். நல்லமுறையில் படித்து 27.03.1963 அன்று குருவாக திருநிலைபடுத்தப்பட்டார் . தான் குருவான அந்த ஆண்டிலிருந்து 27.03.2013 வரை 50 ஆண்டு காலங்களில் தந்தை அவர்கள் பல்வேறு ஊர்களில் பங்குதந்தையாக இருந்துள்ளார்கள். அவற்றில் வடக்கன்குளத்தில் தந்தை அவர்கள் 5 ஆண்டுகள் வட்டார முதன்மை குருவாக இருந்து அருட்தொண்டு ஆற்றியுள்ளார்கள். மேலும் கூத்தங்குழி,ராஜகிருஷ்னாபுரம்,பொத்தக்காலன்விளை,சேதுக்குவாய்த்தான், இலங்குளம்(பரப்பாடி),ஏரல்,காவல்கினறு,கடக்குளம்,தடடார்மடம்,போன்ற பங்குகள் சிறப்பு வாய்ந்ததாகும். அதில் தந்தை அவர்கள் 1985 முதல் 1991 வரை பணியாற்றிய பொத்தக்காலன்விளை திருக்கல்யாணமாதா ஆலய பங்கு மிகவும் சிறப்புமிக்க ஒன்றாக அமைகிறது. ஏனெனில் அந்த 6 ஆண்டுகள் தந்தை அவர்கள் எம் ஊருக்கு ஆற்றிய பணிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவைகளாக உள்ளன. தந்தையவர்கள் இங்கு இருந்த புனித மரியன்னை நடுநிலைபள்ளியை 1986 முதல் உயர்நிலைப் பள்ளியாகவும், 1988முதல் மேல்நிலைப்பள்ளியாகவும் மாற்றினார்கள். 1988 முதல் 1989 ஆகிய இரண்டு ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சி பள்ளியும் நடத்தினார்கள். அவர்கள் ஆற்றிய கல்விப்பணி இதோடு நின்று விடாமல் ஆலயத்தின் பீடத்தின் அமைப்பை மிகவும் அழகாகவும் பக்தியாகவும் இருக்கும் வண்ணம் அன்னையின் திரு உருவத்தை பீடத்தின் நடுவில் அமைத்து இரண்டு வானதூதர்கள் ஆராதிக்கும் விதமாக அமைத்தார்கள், மேலும் திருப்பலி நிறைவேற்றும் பீடத்தில் இராபோஜன படம் ஒன்றை நிறுவி அதையும் மிகவும் பொருள்பதிந்த ஒன்றாக மாற்றினார்கள். இவ்வாறு தந்தை அவர்கள் பொத்தக்காலன்விளையில் இருந்த 6 ஆண்டுகளும் செய்த அருட்பெரிய பணிகளால் மக்கள் மனதில் நீங்காமல் இடம் பெற்று விட்டார்கள். இங்கு மட்டுமல்லாமல் தான் இருந்த அனைத்து பங்குகளிலும் பள்ளிகளை ஆரம்பித்து கல்விபணியில் பெரும் சாதனைப் படைத்த ஒரே தந்தை நமது பீற்றர் ராஜா அவர்களே! எனவே அவர்களை பொன்விழா காணும் “**கல்விதந்தை**” என்று அழைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். அவ்வாறு தான் 50 ஆண்டுகளாக கத்தோலிக்க திருச்சபையின் உண்மையான விசுவாசத் தந்தையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அன்னை மரியின் மாறாத பக்தராகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இப்பெயர் பெற்ற தந்தையவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து வைர, வைடூரிய,விழாக்களை கண்டு சிறப்பு பெற வேண்டும் என்று திருக்கல்யாண அன்னை வழியாக ஜெபிப்போம்.

-**மெசியாஸ் அந்தோணிதுரை,** பொற்பை

# நம்பிக்கை ஆண்டு

**இயேசுவை முழுமையாகச் சந்தித்தலும், இறைவார்த்தையை கேட்டலும்**

இந்த இரண்டு நிகழ்வுமே ஒன்றையொன்று சார்ந்துள்ளன. நமது வழிபாட்டு நிகழ்வுகளில் இறைவார்த்தையை நிலைநிறுத்துவதெற்கென்று புதிய உத்திகளை நாம் கண்டுபிடிக்க தேவையில்லை. மாறாக நமது இன்றைய வாழ்க்கை சூழல்களில் "இயேசு மானிட மக்களை அணுகி அவர்களை ஆட்கொண்டு, சந்தித்து அழைத்த நிகழ்வுகளை மீண்டுமாக கண்டுணர்ந்து நமதாக்க வேண்டும் என்பது மட்டுமே தேவை "

திருத்தூதர்களான புனித பேதுரு, அந்திரேயா, யோவான், மற்றும் யாக்கோபு ஆகியோரை அவர்களுடைய வேலையின் போது சந்தித்து ஆட்கொண்டது போல மேலார்ந்த ஆர்வத்தால் இயேசுவை பார்த்து ஆனால் உள்ளத்தால் அவரால் ஆட்கொள்ளப்பட்டு, அனைத்தையும் பகிர்ந்த சக்கேயுவைப் போல, தாழ்வு மனங்கொண்டு விளிம்பு நிலையில் வாழ்ந்த பார்வையற்றவர் இயேசுவை சந்தித்து பார்வை பெற்றது போல, இயேசுவின் உடனிருப்பால் ஆட்கொள்ளப்பட்டு மனநிறைவு கொண்டு விருந்தோம்பல் செய்த மார்த்தா மரியாவைப் போல் , நாமும் இயேசுவை சந்திக்க மீண்டும் மீண்டுமாக அழைக்கப்படுகிறோம்.

அடிக்கடி இறை வார்தையை வாசிப்பது என்பது, விவிலியத்தின் உண்மையான விளக்கத்தை இறைஒளியால் அறிந்து கொள்வதற்காகவும், இறைவார்த்தையை தெரிந்து கொள்வதற்காகவும் மட்டுமன்று. மாறாக இயேசுவை சந்திக்கக் கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தவும், அதற்கான வழிகளை கண்டுபிடிப்பதற்காகவும் தான். இந்த உண்மையான அணுகு முறையானது தனிப்பட்ட விதத்திலும் நம் குடும்பம், நண்பர்கள், நம்முடைய பணிகள், வாழ்வின் இன்ப துன்ப நிகழ்வுகள் அனைத்திலும் ஊடுருவிச் சென்று வேரூன்ற வேண்டும்.

–அருட்திரு. **பவுன்ராஜ்**, கப்புச்சின்

## இந்த நம்பிக்கை ஆண்டில் நமக்குத் திருச்சபையின் பரிந்துரைகள்.

★ திருச்சபையின் போதனைகளை அறிவோம். இறைவார்த்தையை அறிவதன் வழியாக நமது விசுவாசம் ஒளிபெறுகிறது. விசுவாச வருடத்தில் தினமும் திருவிவிலியத்தை வாசிப்பதைத் தொடர்வோம் அல்லது வாசிக்கத் தொடங்குவோம். விசுவாசப் பிரமாணத்தைத் திருப்பலியில் அல்லது செபமாலை தொடக்கத்தில் மட்டுமல்ல மற்ற பொருத்தமான நேரங்களிலும் (உ-ம். அன்றாட திருப்பலி, காலை-மாலை வழிபாடுகளில்) அறிக்கையிடலாம்.

★ திருப்பலி மற்றும் திருவருட் சாதனங்களில் முழு மனதோடு தகுந்த தயாரிப்போடு பங்கு பெறுவோம். விசுவாசத்துடன் அணுகி, செபம், பாடல்களில் இணைந்து, பார்வையாளர்களாக இன்றி, பங்குபெறுபவர்களாக இருப்போம்.

★ புனிதர்களை அறிவோம் : விசுவாசத்தின் சிறந்த மாதிரியான தூய கன்னிமரியாள், திருத்தூதர்கள் மற்றும் புனிதர்கள் பற்றி இன்னும் அறிய முயல்வோம்.

★ எளியவர்க்கு உதவி : நம் விசுவாசத்தைச் செயல்படுத்தும் வகையில் ஏழை எளியவர்க்குக் கோவில், திருத்தலங்கள் முன்பு உட்கார்ந்திருப்போருக்கு மட்டும் உதவுவது என்றிராமல், தேவையில் உள்ள நம் அயலாருக்கு உதவிசெய்து அவர்களை வாழவைப்பதன் வழியாக நம் விசுவாசத்தை அன்றாட வாழ்வாக்க முயல்வோம். இவ்விதம் இந்த நம்பிக்கை ஆண்டின் விளைவாக , நமது விசுவாசத்தில் உறுதியடைந்து, மகிழ்ச்சிமிக்க கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாய் வாழ்ந்து உயிர்த்த இயேசுவுக்கு சாட்சிகளாவோம்.

# ஆன்மீக விளைநிலமாம் பொற்பை மண் காணும் ஐந்தாம் குரு

## அருட்பணி. ஜோசப் பாக்கியராஜா

அருட்சகோ. ஜோசப் பாக்கியராஜா அவர்கள் கணக்குப்பிள்ளை அந்தோணிமுத்து-ஹெலன் ரோசாரி தம்பதியரின் மூன்றாம் மகனாக 29.03.1982அன்று உதித்தார். சிறுவயதிலிருந்து இன்று வரை பாக்கியம்-குயின்ரோஸ் தம்பதியினர் அருட்சகோதரரை சிறப்பாக வளர்த்து வருகின்றனர். பள்ளி இறுதிப்படிப்பு வரை பொற்பையில் கல்வி பயின்று ஒழுக்கத்திலும் ஆன்மீகத்திலும் சிறந்து விளங்கினார். 1999-2001வரை கள்ளிகுளம் ஐ.டி.ஐ யில் டிப்ளமோ கல்வியை முடித்தார்.

இறைதிருவுளத்தின்படி 2002ம் ஆண்டு பீகார் மாவட்டம் பெற்றியா மறைமாவட்டத்திற்கு குருமாணவராக மண்ணின் மைந்தர் அருட்பணி டென்சில் ராஜா அவர்களால் அனுப்பிவைக்கப்பட்டார். 2002-2004 வரை புனித ஜாண் ரீஜனல் செமினரியில் ஹிந்தி மற்றும் ஆங்கிலம் கற்றுத் தேர்ந்தார். அதன் பின்பு 3 வருடம் ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் உள்ள புனித ஆல்பர்ட் கல்லூரியில் தத்துவயியல் படிப்பை நிறைவு செய்தார். அதன் பின் 6 மாத காலம் பீகார் மாநிலம் ராம்பூர் பங்கு மக்களிடம் களப் பணியாற்றினார்.

2008-2009 வரை ஒன்றரை வருடங்கள் பீகாரில் உள்ள துசையா என்ற இடத்தில் உள்ள புனித பேதுரு மைனர் செமினரியில் புதிய குருமாணவர்களுக்கு போதிக்கும் பணியை செவ்வனே செய்தார். அதன்பின் நான்கு ஆண்டுகள் புனித சவேரியார் மணம் கமழும் கோவாவில், பில்லார் என்ற இடத்தில் உள்ள ஆல் இண்டியா மிஷன் செமினரியில் இறையியல் கல்வியை கற்றுத் தேர்ந்தார். 27.10.2012 அன்று கோவாவில் டீக்கன் பட்டம் பெற்று ராம்நகர் புனித சவேரியார் ஆலயத்தில் களப்பணியாற்றி வருகிறார்.

இடைப்பட்ட காலத்தில் அருணாசல பிரதேசத்தில் கிறிஸ்துவை புதிதாக அறிந்த மக்களிடையே போதிக்கும் பணிக்காக அனுப்பிவைக்கப்பட்டார். கவுன்சிலிங் மற்றும் மியூசிக் ஆகிய துறைகளில் பட்டங்கள் பெற்றுள்ளார்.

22.04.2013 அன்று பொத்தக்காலன்விளை திருக்கல்யாணமாதா திருத்தலத்தில் தூத்துக்குடி ஆயர் முன்னிலையில் பீகார் ஆயர் அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட இருக்கிறார். அவ்விழாவில் அனைவரும் கலந்து சிறப்பிக்க வேண்டுகிறோம். அவருடைய குருத்துவப் பணிவாழ்வு சிறக்க பங்குத் தந்தை, பங்கு இறைபணியாளர்கள் மற்றும் பங்கு மக்கள் அனைவரும் அவருக்காக செபிப்போம். அவரை வாழ்த்துவோம்.

- **ஜோசப் ததேயுஸ் ராஜா,** ஆசிரியர்




# நன்றிகள் பலகோடிகள் 02.02.2013
# முதல்சனி உணவு
# நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| அந்தோணி ராஜ் (பொற்றை) | - | 500.00 |
| குறிப்பிட்ட நபர் (பொற்றை) | - | 501.00 |
| ரோஸ் சேவியர் (சென்னை) | - | 2000.00 |
| ஜெபஸ்டின் ரெனிஷா | - | 501.00 |
| அமல்ராஜ் (சென்னை) | - | 500.00 |
| அந்தோணி ராஜ் | - | 500.00 |
| லூக்காஸ் மளிகை (திருப்பூர்) | - | 1001.00 |
| வின்சென்ட் (பொற்றை) | - | 1000.00 |
| ராஜேந்திரன் (பொற்றை) | - | 100.00 |
| அன்றோ (தூத்துக்குடி) | - | 1000.00 |
| குறிப்பிட்ட நபர் (புத்தன் துறை) | - | 1000.00 |
| டெய்சி (கருங்கல்) | - | 500.00 |
| சகாயராஜ் (கருங்கல்) | - | 100.00 |
| மேக்சன் (மணப்பாடு) | - | 500.00 |
| தேனிட்டஸ் (சென்னை) | - | 3700.00 |
| தங்கராஜ், பாக்கியசீலி(காலன்குடியிருப்பு) | - | 350.00 |
| தாசன் (கவரப்பேட்டை) | - | 3700.00 |
| மரிய காகுராஜா (வெள்ளக்கோவில்) | - | 500.00 |
| முருகேசன் (நரையன்குடியிருப்பு) | - | 1000.00 |
| ரோசாரி (நெடுங்குளம்) | - | 500.00 |
| அனிஸ்மெஸ் (பொள்ளாச்சி) | - | 150.00 |
| அந்தோணி செல்வன் (சாத்தை) | - | 1000.00 |
| லொபின் (உவரி) | - | 1000.00 |
| மைக்கிள் சதிஷ் (கிழவநேரி) | - | 10000.00 |
| சக்கரியாஸ் (உவரி) | - | 1000.00 |
| அகசைனி (தென்திருப்பேரை) | - | 500.00 |
| மைக்கிள், மதுரசிங் (நாகர்கோவில்) | - | 500.00 |
| ரீகன் ரிஷா (உவரி) | - | 500.00 |
| எட்வின் (மணப்பாடு) | - | 1000.00 |
| **K.G.**ஜிவல்லரி (நாகர்கோவில்) | - | 200.00 |
| அமுதா (பொற்றை) | - | 100.00 |
| கென்னடி கலா (தூத்துக்குடி) | - | 100.00 |
| ராணி பிரான்சிஸ் (தூத்துக்குடி) | - | 100.00 |
| மொத்தம் | - | **35603.00** |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| திரு. காமராஜ் டெய்சிராணி | –சாப்பாடு பிளேட்கள் (10000) |
| அன்னையின் அடிமை | – பீடப்பூக்கள் |
| ரவிஸ்டர் (பொற்றை) | –வெங்காயம் 87 கிலோ |
| | கேரட் 60 கிலோ |
| லாரன்ஸ் (பொற்றை) | – தக்காளி 13 பெட்டி |
| டைட்டஸ் (பொற்றை) | – ப.மிளகாய் 54 கிலோ |
| அலெக்ஸ் (பொற்றை) | – உருளை 67 கிலோ |
| **S.R.T.**(கோயம்பேடு) | – உருளை 1 மூடை |
| ஜெயச்சந்திரன் (கோயம்பேடு) | – சேனை 54 கிலோ |
| | ம.பூசனி 20 கிலோ |
| கிருஷ்ணமூர்த்தி (கோயம்பேடு) | – பெ.வெங்காயம் 2 மூடை |
| நீலகிரி டிரேடர்ஸ் (கோயம்பேடு) | – பெ.வெங்காயம் 1 மூடை |
| கோவிந்தராஜ் (கோயம்பேடு) | – மாங்காய் 10 கிலோ |
| குறிப்பிட்ட நபர் (பொற்றை) | – அரிசி 300 கிலோ |
| குறிப்பிட்ட நபர் (சாத்தை) | – அரிசி 100 கிலோ |
| ஜெரோம் குயின்டீன் (கவரப்பேட்டை) | – அரிசி 100 கிலோ |
| **M.R.** ஜஸ்டின் (சென்னை) | – அரிசி 100 கிலோ |
| ராஜேஷ் அமலா (பொற்றை) | – அரிசி 50 கிலோ |
| சூசை மிக்கேல் (கோவை) | – அரிசி 50 கிலோ |
| ரூபி ஸ்டோர் (பொற்றை) | – அரிசி 50 கிலோ |
| அந்தோணி சுமதி (பூந்துறை) | –அரிசி 75 கிலோ |
| புஷ்பராஜ் (இராமன்துறை) | – அரிசி 50 கிலோ |
| சித்திரை ராஜ் (உடன்குடி) | – அரிசி 25 கிலோ |
| ஜேம்ஸ் (ராஜாக்கமங்கலம் துறை) | – அரிசி 25 கிலோ |
| வில்பர்ட் (பூந்துறை) | –அரிசி 25 கிலோ |
| தமிழ்ராஜா (கூடன்குளம்) | –அரிசி 25 கிலோ |
| சந்தன பட்டுராஜா (கூடன்குளம்) | – அரிசி 25 கிலோ |
| சபாரத்தினம் (கூடன்குளம்) | – அரிசி 25 கிலோ |

## முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (02.02.2013)

| | | |
|---|---|---|
| யோவான் சமையல் குழு | - | 13000.00 |
| இருதயம் விறகு | - | 5400.00 |
| பாஸ்கர் மளிகை | - | 59656.00 |
| இருதயராஜ் ரூபி ஸ்டோர் (அரிசி 7 1/2 மூடை) | - | 27000.00 |
| சென்னை பஸ் காய்கறி செலவு | - | 700.00 |
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | - | 200.00 |
| தூய யோவான் ஆலய பாத்திர வாடகை | - | 200.00 |
| ஜெயக்குமார் வண்டி வாடகை (7 நடை) | | 1750.00 |
| மொத்தம் | | 107906.00 |

| | | |
|---|---|---|
| முன் இருப்பு வங்கியில் | - | 66647.00 |
| வங்கி வட்டி மூலம் வரவு | - | 1827.00 |
| நன்கொடை வரவு | - | 35603.00 |
| முதல் சனி மீதி பொருள் ஏல வரவு | - | 11310.00 |
| ஜோஸ் குடும்பத்தார் வங்கியில் | - | 3000.00 |
| மொத்தம் | - | 118387.00 |
| செலவு | - | 107906.00 |
| மொத்த இருப்பு | - | 10481.00 |

| | | |
|---|---|---|
| வங்கியில் | - | 10466.00 |
| கையில் | - | 15.00 |
| இறுதி மொத்த இருப்பு | - | 10481.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 31.01.13 அன்று இருப்பு | 171183.00 |
| 01.02.13 முதல் 28.02.13 வரை விற்பனை | 106386.00 |
| மொத்தம் | 277569.00 |
| 01.02.13 முதல் 28.02.13 வரை செலவு (பொருட்கள் + சம்பளம்) | 83870.00 |
| 31.01.13 அன்று இருப்பு | 193699.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்

# வாழ்வின் நம்பிக்கை வேதம்

சத்திய வேதத்தை நாளும் விசுவாசி!
சாத்தானை வென்றிடும் வழியென்றே விசுவாசி!
சான்றோனாய் வாழ வைத்திடும் என்றே விசுவாசி!
உன் விசுவாசம் உன்னை குணமாக்கியது!
உன்னை பெரிய இனமாக்குவேன் என்றுரைத்த
உருவில்லா இறைவனின் வார்த்தையை விசுவாசி!
வாழும் வகை அறியாது தவித்த மக்களுக்காய்!
வான தூதர்கள் மங்கல கீதம் இசைத்திட
வாக்கு மனிதர் ஆனார் என்பதை விசுவாசி!
இறைவார்த்தையை இதயத்தில் ஏற்று இறைமகன்!
இயேசுவை கருவினில் சுமந்த கன்னிமரியாள்
இறையரசின் நம்பிக்கை நாயகி என்றே போற்றப்படுகினறார்!
இஸ்ராயேல் குலத்தின் தந்தையான யோசேப்பு
இறைவனின் திட்டத்திற்கு உட்பட்டதன் பலனாக
இன்று திருக்குடும்பத்தின் தலைவராக போற்றப்படுகின்றார்!
காலத்தை வென்ற வெற்றி வீரர் இயேசுவை
கண்ணால் கண்டதால் நம்பிய தோமை யாராயிராமல்
காணாமலேயே உண்மை கிறிஸ்தவனாய் வாழ்ந்திடு!
நாளும் திருச்சபை பேணியே வளர்த்திடவே
நாமே திருச்சபை என்பதை உணர்ந்திடவே
நாயகன் இயேசுவின் நற்செய்தி நம்பிடுவோம்!
நானிலத்திலும் இறையாட்சி மலர்ந்திட உழைப்போம்!

–**மிக்கேல் உஷா**, பொற்பை.

# அழகுக்கும் அழகு



கவிதைக்கு சொல் அழகு
சொல்லுக்கு பொருள் அழகு
பாட்டுக்கு பண் அழகு
மயிலுக்குத் தோகை அழகு
குழந்தைக்கு மழலை அழகு
இளமைக்கு மிடுக்கு அழகு
கடலுக்கு அலை அழகு

கன்னிக்க கற்பு அழகு
சொந்தத்திற்கு பாசம் அழகு
பக்தைக்கு பரமனடி அழகு
மனிதர்க்கு மானம் அழகு
குவலயத்திற்கு அறிவொளி அழகு
இதயத்திற்கு இரக்கம் அழகு
கருணைக்கு ஈகை அழகு

இத்தனை அழகுக்கும் அழகு சேர்ப்பது நம் திருக்கலயாணத் தாயின் பேரழகு!

-**ரெஜினாள் மேரி (ஆசிரியை)**, பொற்பை

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**02-03-2013 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1458 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1207 பேர் |
| சுகப்பிரசவம் | - | 1303 பேர் |
| நற்சுகம்பெற | - | 1696 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 1255 பேர் |
| தேவஅழைத்தல் | - | 1233 பேர் |
| வேலைகிடைக்க | - | 1366 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1458 பேர் |
| குடும்பசமாதானம் | - | 2070 பேர் |
| குடும்பநலன் | - | 2098 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 1889 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 2918 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 1739 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1431 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 1666 பேர் |
| மனமாற்றமடைய | - | 1118 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1203 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 1533 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 1602 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 1569 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 1260 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** - பங்குத்தந்தை

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

1. சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும் அது என்ன?
தபால்
2. உயர்ந்த மாடிக்காரி கருப்பு சேலைக்காரி மஞ்சள் ரவிக்கைகாரி அவள் யார்?
பனம்பழம்
3. ஊருக்கு நாட்டாண்மைகாரன் சாப்பிட்ட இலையை எடுக்க மாட்டான் அவன் யார்?
நாய்
4. இத்தினியுண்டு சிட்டுக்குருவி இழுத்து இழுத்து முள்ளடைக்குது அது என்ன?
ஊசி
5. அன்ன நடை நடந்தாலும் அதிரும் தரைப் பகுதி அவன் யார்?
யானை

- **டே. கீர்த்திகா,** வெள்ளக்கோவில்



# தேவ வரபிரசாதத்தின் மாதாவே!

தேவ வரப்பிரசாதம் என்பது அருள்வரங்களைக் கொணரும் வாய்க்கால் எனப் பொருள்படும். கன்னி மரியாவின் மன்றாட்டு மாலையில் மரியா தேவ வரப்பிரசாதத்தின் தாய் எனறு அழைக்கப்படுகிறார். இதன் இறையியல் அர்த்தம் என்ன ? ஏன் மக்கள் வெளிப்படையாக தங்கள் கருத்தை ஆழமான முறையில் வெளிப்படுத்த வேண்டும் ?

மரியா இறைமகனை தன் உதிரத்தில் தாங்கிப் பெற்றெடுத்தவள். கிறிஸ்துவில்தான் அனைத்தும் உண்டாக்கப்பட்டன. அவர் வழியாகவே அனைத்தையும் பெறுகிறோம் என்பதை நாம் ஒருபோதும் மறத்தல் ஆகாது. எந்த ஒருவகையான அருளும் அல்லது வரப்பிரசாதமும் இறைமகனின் பாடுகள் தந்த கனிதான். மரியாள் அப்பேறு பெற்ற இறைமகனையே உதரத்தில் தாங்கி உலகிற்கு உன்னதம் செய்ய தன்னையே அர்பணம் செய்ததை எண்ணி எண்ணிப் பார்த்து மிகவும் பெருமைப்பட மட்டுமல்ல, சந்தோசம் அடைய வேண்டியது அவசியம்.

கடவுள் நினைத்தருந்தால் தன் மகனை ஆதாம் ஏவாளைப் படைக்கும்போது திட்டம் வகுத்து செயல்பட்டதுபோல அதையொத்த திட்டத்தால் இறைமகனையும் பிறக்கச் செய்திருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. மாறாக ஒரு மனித உதிரத்தின் வழியாக பிறக்கவே திட்டம் வகுத்திருந்தார். அத்திட்டம் மரியா வழியாக ஈடேறியிருக்கிறது.

இயேசுவையே தன் வழியாக உலகம் பெற வாய்ப்புத் தந்தவர் மரியா. இவர் இயேசுவை விசுவசிக்கும், ஏற்றுக்கொள்ளும், அவரோடு இணைந்திருக்கும் அனைவருக்கும் அன்னைதான். இதே கருத்து 10 ஆம் பத்திநாதரின் Ad Diem Illum என்ற மடலில் தெளிவாக காணப்படுகிறது. ஆதலால் இந்த விழிப்பு மிகவவும் ஏற்புடையதே . அது மட்டுமல்லாமல் இன்றளவும் இது மிகவும் செல்வாக்கு கொண்ட ஒன்றாக உள்ளது.

மரியாவின் பங்கு இயேசுவுக்கு மனித உடல்பிறப்பு தந்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை. மாறாக இயேசுவின் மீட்புப்பணியில் தன்னையே கல்வாரி மலையில் தியாகப் பலியாக ஒப்புக் கொடுக்க அன்னை முழு ஒத்துழைப்புக் கொடுத்து நமக்கு அருளைப் பெற்றுத் தந்தார். இவ்வாறு விண்ணகச் செல்வமான அருளைப் பகிர்ந்து தர இயேசு தன் அன்னையைப் பணித்தார் என்றும் கூட அர்த்தம் கொள்ளலாம்.

மரியா அருளைப் பெற்றுக்கொண்ட பெண்மணி மட்டுமல்ல.அதைக் காத்துப் பின்னர் நமக்கும் வாரி வழங்கி வருபவர். அதனாலேயே நாம் அவரைத் தேவ வரப்பபிரசாதத்தின் தாய் அல்லது அன்னை என அழைக்கிறோம்

- நன்றி : **தாயே எங்கள் தஞ்சமே**




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1. விபத்தில் இருந்து சுகம் கிடைத்ததற்கு நன்றி – **சீத்தாம்மா, புஷ்பராஜ்,** பொழியூர்
2. குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கு நன்றி – **லஜிண்டன் சிந்தியா,** மணப்பாடு
3. திருமணம் நடந்ததற்கு நன்றி. – **சில்வாண்ஸ், ஜெனிபர்,** மணப்பாடு
4. திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி. –**சாஜுபிரியங்கா,** மேல்மிடாலம்
5. இதுவரை செய்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி – **ஸ்டாலின்,** வெட்டுக்காடு
6. வயிற்றில் உள்ள கட்டி கரைந்ததற்காக நன்றி – **கல்பனா,** மள்ளூர்துறை
7. குடும்பத்தார் பெற்ற நன்மைகளுக்கு நன்றி – **ஹெல்டன்,** மணப்பாடு
8. தொழிலுக்காக அமைத்த போர்ட் வெற்றியாக அமைந்ததற்கு நன்றி.
   – **கிஷோர் குமார்,** தூத்துக்குடி
9. திருமணம் சிறப்பாக நடைபெற்றதற்காக நன்றி –
   **சேசுதுரை விக்டோரியா மேரி,** பொற்பை
10. குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கு நன்றி. – **டையோன்சி,** பெரியதாழை
11. தேர்வில் வெற்றி பெற்றதற்கு நன்றி – **ஜோசப் இருதயராஜ்,** கூத்தங்குழி
12. குழந்தை பாக்கியம் கிடைத்தமைக்கு நன்றி. – **எலிசபெத்,** சின்னத்துரை
13. தொழில் முன்னேற்றம் கிடைத்ததற்கு நன்றி. – **மரிய பிராங்கோ,** தேங்காய்பட்டினம்.
14. திருமணம் நல்லபடி முடிந்ததற்கு நன்றி – **உஷா ராகேஷ்,** தூத்துக்குடி
15. குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி. – **ஜீஜா, ராஜு**– விளிஞும்.
16. நினைத்த காரியம் நடந்ததற்கு நன்றி – **தேவ சகாயம்,** அழப்பபுரம்
17. மாதா செய்த அனைத்து காரியங்களுக்கும் நன்றி.
    – **அந்தோணி சேவியர்,** சின்னவிளை
18. கடலில் 4 நாட்களாக தத்தளித்தவர் மீண்டும் வந்து சேர்ந்தமைக்கு நன்றி.
    – **ஜாய் ஜெனுபா** இறைமன்துறை
19. திருமணம் நடந்ததற்கு நன்றி. – **கார்த்தி, சிபில்,** இரவிபுத்தன்துரை
20. உடல் நலம் கிடைத்தமைக்கு நன்றி – **எமிலி. மரிய மிக்கேல்,** கண்டன்விளை
21. நோய் தீர்ந்ததற்கு நன்றி, **ஜாண், அஜின்** – ஹெலன் காலணி
22. ஆண்குழந்தை கிடைத்ததற்கு நன்றி. – **ரீனா,** பாரசாலை
23. புதிய வீடு கிடைத்ததற்கு நன்றி – **சாஜி, முத்தம்மன்,** பொழியூர்
24. வெளிநாட்டில் வேலை கிடைத்தமைக்கு நன்றி.– **சைமன், மினு,** பொழியூர்
25. கேன்சர் நோய் நீங்கியதற்கு நன்றி. – **மத்தேயு,** மணப்பாடு
26. நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி. – **சுதா செல்வகுமார்,** தஞ்சாவூர்.
27. சித்ராவுக்கு அறுவை சிகிச்சை நடந்து சுகம் கிடைத்ததற்கு நன்றி
    – சாந்தி, பொற்பை

**- பங்குத்தந்தை**

# முதல் சனி வழிபாடு
# (2.3.2013)



திருக்கல்யாண மாதா திருத்தலத்தில்

மார்ச் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 02.03. 2013 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**மரிய அரசு** அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துக்கள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. சாத்தான்குளம் மறைவட்ட முதன்மை குரு பேரருட்திரு. **எட்வர்ட்** அடிகளார், அவர்கள் தலைமையில் பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு.**போஸ்கோ,** அருட்திரு. **ராஜா,** அருட்திரு. **கிராஸிஸ்,** அருட்திரு.**சகாயராஜ்,** அருட்திரு. **டக்ளஸ்**, அருட்திரு. **மரிய அரசு**, திருத்தொண்டர் **டேவிட் வளன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**மரிய அரசு** அடிகளார், மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து 125 வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **10,500** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதைத் திருத்தொண்டர் **டேவிட் வளன்** வழி நடத்தினார்கள். அதன்பின்பு பங்குத்தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.

**- பங்குத்தந்தை**

## பிப்ரவரி 2013 – வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| **வரவுகள் :** முன்னிருப்பு | | |
| வங்கியில் ரூ.716105.00 | | |
| கையில் ரூ.9367.00 | 725472.00 | |
| திருப்பலி 323X70 (முதற்சனி 257 அலுவலகம் 66) | 22610.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை - 10320.00 | | |
| கிளை பங்குகள் - 1620.00 | 11940.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 205350.00 | |
| காலண்டர் விற்பனை மூலம் | 120.00 | |
| பழைய மெழுகு விற்றது | 6300.00 | |
| அடுப்புக்கரி விற்றது | 700.00 | |
| ஆலய வீடு வாடகை | 1000.00 | |
| முதல சனி கடைகள் | 3600.00 | |
| பயணிகள் தங்கும் அறை | 150.00 | |
| மண்டபம் வாடகை | 4000.00 | |
| பள்ளிகள் மூலம்(4088+435) | 4523.00 | |
| திருமணம் | 200.00 | |
| வங்கி வட்டி வரவு | 320.00 | |
| **மொத்தம்** | **986285.00** | |
| **செலவுகள் :** | | |
| முதல் சனி ஆயர் குருக்கள் படி | - | 8950.00 |
| ஏசுராஜபுரம் புதிய பங்கு உதவித்தொகை | - | 5000.00 |
| பங்குத்தந்தை விடுமுறை நாட்களில் | | |
| அருட்பணி பீற்றர் ராஜா படி | - | 2000.00 |
| உதவித்தொகை | - | 500.00 |
| நோட்டிஸ் வினியோகம் செய்ய | - | 500.00 |
| மேக் டிவி முதல் சனி விளம்பரம் | - | 4000.00 |
| மருந்துகள் | - | 376.00 |
| மலையாள பாடல்கள் சி.டி | - | 200.00 |
| சமையல் எரிவாயு | - | 500.00 |
| ஆயர் மூலம் கருணை இல்ல இனிப்புகள் | - | 500.00 |
| டோபி (வீடு+ பயணிகள் அறை) | - | 540.00 |
| ஆலய ஜெனரேட்டர் + வாகன டீசல் பெடரோல் | - | 3134.00 |
| தொலைபேசி கட்டணம் | - | 561.00 |
| ஆலயத்திற்கு 500 சேர்கள் வாங்கியது | - | 155000.00 |

| | | |
|---|---|---|
| பாத்திர அறை மின் மீட்டர் | - | 1800.00 |
| லூர்து அன்னை சப்பரபவனி மின் விளக்கு | - | 1000.00 |
| மாதா சபை கூல்டிரிங்ஸ் | - | 200.00 |
| பழங்கள் | - | 1150.00 |
| மீன் ,காய்கறி | - | 1535.00 |
| தண்ணீர், பால் | - | 1415.00 |
| மளிகை சாமான்கள் | - | 2175.00 |
| ஸ்டேசனரி, தபால் | - | 320.00 |
| பங்கு மக்கள் பயணச் செலவு | - | 280.00 |
| செப்டிக் டேங்க் மூடி 2 க்கு டிரான்ஸ்போர்ட் | - | 870.00 |
| பள்ளி செப்டிக் டேங்க் சுத்தம் செய்ய | - | 28500.00 |
| மேல் நிலைப்பள்ளி அங்கிகாரம் வகைக்கு | - | 7000.00 |
| பாஸ்கா திரி முன்பணம் | - | 1000.00 |
| ஜோஸ் ஆலய சக்கரீஸ்ட் பணி | - | 2000.00 |
| உபதேசியார் ஊதியம் | - | 3000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | - | 3000.00 |
| இரண்டு துப்பரவு பணியாளர்கள் ஊதியம் | - | 6000.00 |
| இரவுப் பணியாளர் ஊதியம் | - | 2000.00 |
| தொடக்கபள்ளி ஆசிரியர் ஊதியம் | - | 2000.00 |
| அருட்சகோதரர் படி | - | 1000.00 |
| பங்குதந்தை படி | - | 6000.00 |
| பங்குதந்தை திருப்பலி படி | - | 1500.00 |
| புனித வரி திருப்பலி 323×5=1615<br>273×50=13,650 | - | 15265.00 |
| மின் கட்டணம் | - | 31576.00 |
| பந்தல் பிரித்து பள்ளியில் அமைக்க | - | 40577.00 |
| புதிதாக கோயில் முன் பந்தல் அமைக்க | - | 86468.00 |
| பள்ளி பெரிய கேட் முன் காங்கிரிட் அமைக்க | - | 22988.00 |
| செப்டிக் டேங்க் மூடி உடைத்து தளம் உடைத்து சுத்தம் செய்ய | - | 7000.00 |
| மொத்த செலவு | | 459380.00 |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ.986285.00 |
| மொத்த செலவு | ரூ. 459380.00 |
| இறுதியிருப்பு | ரூ. 526905.00 |

| | |
|---|---|
| வங்கியில் | ரூ. 524060.00 |
| கையில் | ரூ. 2845.00 |
| மொத்தம் | ரூ. 526905.00 |

# வாசகர் உள்ளம்...



- உலகத்திருச்சபை செய்திகளில் திருத்தந்தை 16-ம் ஆசீர்வாதப்பர் குழந்தையாக இருந்தபோது இயேசுவுக்கு எழுதிய கடிதம் உள்ளத்தை தொடுவதாக இருந்தது. **ஜெஸ்ரோன்** - இணையம்

- மறைமாவட்ட செய்திகள் கடந்த மாத மறைமாவட்ட நிகழ்வுகள் மற்றும் மறைமாவட்ட தவக்கால திருப்பயணங்களை பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள முடிந்தது. **பிரமிளா** - இராமன்துறை

- பங்குச்செய்திகளில் பங்குத் தந்தையின் கிரெடிட் கார்ட் சிஸ்டம் என்ற பரிசுத் திட்ட அறிவிப்பை பார்த்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். இத்திட்டம் பலர் புதிய நற்செயல்கள் செய்வதற்கு உதவியாக இருக்கும் என உறுதியாக நம்புகிறேன். **இராஜேந்திரபாபு,** பொற்பை

- பங்குச் செய்திகளின் மூலம் பங்கின் முக்கியமான நிகழ்வுகளை என்னைப் போன்றவர்கள் அறிந்துகொள்ள உதவுகிறது. **சோனியா,** காவை

- தவக்காலம் என்ற கட்டுரை இந்த தவக்காலத்தில் நாம் என்ன மனநிலையோடு இருந்தால் அது அர்த்தமுள்ளதாக இருக்கும் என்பதை படம் பிடித்துக் காட்டுகிறது. - **ஆரோ அல்பினா,** தஞ்சை

- தவக்காலத்தை தகுதியாய் கடைபிடிக்க அருமையான 20 அம்ச திட்டங்களுக்கு நன்றி. - **விஜய்,** கோவை

- முதல்சனி நன்கொடையாளர்களுக்கு அன்னையின் ஆசீர் நிறைவாக கிடைக்க ஜெபிக்கிறோம். - **ஜேம்ஸ்,** சென்னை

- ‘அன்பு என்பது தெய்வீகமானது’ என்பது மனித அன்பையும், தேவ அன்பையும் படம் பிடித்துக் காட்டுவது போன்றிருந்தது. -**பில் கிளிண்டன்,** தாம்பரம்

- “மகா அன்பிற்கு பாத்திரமான மாதாவே” மரியன்னையை வாழ்த்திப் பாடும் அருமையானதொரு கட்டுரை. - **வில்சன்,** தூத்துக்குடி

- “அன்னையின் காட்சிகள்” திருக்கல்யாணத் தாயின் அற்புதங்களை பறைசாற்றுவதாக இருந்தது. - **அஜெய்,** மதுரை

- “காத்திருக்கும் இறைவன்” கட்டுரை மனம் மாறி மீண்டும் இறைவனிடம் திரும்பி வர வழிகாட்டுகிறது. -**ரவீஸ்டர்,** குற்றாலம்

- புனித சூசையப்பர் கதை, கட்டுரை அன்னை மரியாளுக்கும், குழந்தை இயேசுவுக்கும், தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல அகில உலகத்திற்கே பாதுகாவலராக தெரிந்து கொள்ளப்பட்டவர்- **ஹில்டன்,** திண்டுக்கல்

**– பங்குத்தந்தை**

# நம்பிக்கையின் பரிசு
# இறையாட்சி

**முன்னுரை :**

கடுகளவு நம்பிக்கை கொண்டு  கடலளவு நல்லன செய்து
கடவுளாட்சி யெனும் கொடையை  இலவசப் பரிசாய் பெறுவோம்

இயேசு மனிதரை ஓர் உன்னத, உயர்ந்த நிலைக்கு அழைக்கிறார், அவரது போதனையும், செயல்பாடும், இன்றைய மனிதருக்கு வாழ்வளிக்கும் அருள் ஊற்று. மனிதரோடு தம்மை ஒன்றுபடுத்திய இயேசு, இறைவனை நமக்கு வெளிப்படுத்தி ஒரு புதிய சமுதாயம் உருவாக்கிட ஆற்றல் வழங்குகின்றார். ஒளிமயமான எதிர்காலம் பிறக்க நாம் கல்வாரி நாயகனில்  நம்பிக்கை வைப்போம்.

**யார் இந்த இயேசு ? :**

இக்கேள்விக்கு விடைதருவது நற்செய்தி ஏடுகள் ஆகும். இயேசுவை பற்றிய ஆதாரத் தொகுப்பே நற்செய்தி ஏடுகள் ஆகும். நற்செய்தியின் முக்கிய கதாபாத்திரம் இயேசு. இயேசு கடவுளின் மகன்(மாற் 1:1) மானிட மகன், இம்மானுவேல், மெசியா, ஆண்டவர், தாவீதின் மகன், கடவுளின் ஊழியன், போன்றவை இயேசுவை சுட்டும் சிறப்பு பெயர்கள். இயேசு கடவுளின் ஆட்சியை அறிவிக்கவந்தார். இயேசு மெசியா எனபது அவருடைய உயிர்ப்பில் தெளிவு பெற்றது.

**நம்பிக்கையெனும் புத்தொளி:**

யோவான் நற்செய்தியில் நம்பிக்கை என்பது இயேசுவை உறுதியாகப் பற்றிக் கொள்வதைக் குறிக்கும்(யோவா 13: 17) எனக் கூறப்படுகிறது. நம்பிக்கையான வாழ்வு இயேசுவின் சிலுவையோடு நெருங்கி பிணைந்துள்ளது. கிறிஸ்துவை ஏற்று மன உறுதியோடு  பணி செய்தலையும் உள்ளடக்கியது. நம்பிக்கை என்பதன் பொருள் என்ன? தீமையை முறியடிக்கும் சக்தி  நன்மைக்கும் உண்டு. தீமையை நன்மை வென்றே தீரும் என்று  உறுதியாக  நம்புவதே நம்பிக்கையின்  பொருளாகும். இத்தகைய உறுதிதான் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு உயிர்மூச்சு. உண்மையின் சக்தி, கடவுளின் சக்தி.

நவீன கால நம்பிக்கை நட்சத்திரம்

“**ஐரோம் ஷர்மிளா**” இப்பெண் மணிப்பூர் மக்களின் இக்கால விடியல். ஆம்! மணிப்பூரில் இராணுவத்தினரின் தாக்குதலால் உயிரிழந்த பத்து அப்பாவி மக்களுக்காய் 12 ஆண்டுகள் உண்ணாநிலை போராட்டம் நடத்திவரும் சமூக ஆர்வலர். மக்களாட்சி அரசு திணிக்கும் சின்னச் சட்டங்களைக் கூட எதிர்கொள்ள அஞ்சும், இயேசுவின் வாரிசுகளாகிய நாம் இப்பெண்மணியிடம் கற்றுக்கொள்வது தெய்வீக சக்தியாம் நம்பிக்கை என்னும் மதிப்பீடு.

முடிவுரை : நம்பிக்கை சமூகச் சூழலில் தோன்றுகிறது. சமத்துவம் என்ற உயிர்மூச்சு சமூகத்தில் உயிர்பெற்றால் நம்பிக்கையென்னும் மரம் மிகுந்த கனியைத் தரும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

– **ம. ரூபி அனன்ஸியா**, திருச்சி

# கவிதைச் சோலை

## வேண்டுகிறோம்...

திருக் கல்யாண அன்னையின்
திரு உருவம் கண்டு
திருமதிகளாய் பெண்களை மாற்றி
திருக்கோலமாய் தேரினில் அமர்ந்து
தினம் எமக்கருள்வாய் என
திங்கள் தோறும் முதற்சனியில்
திருப்தியாக வேண்டுகிறோம்.

– **சுகிர்தமணி அன்பரசன்,**
கவரப்பேட்டை

## மங்கையர் திலகம்...

பொற்பையில் எழுந்தருளி
பொற்றாமரையாய் அருளீந்து
பொங்கிடும் காவிரியாய்
பொக்கிஷம் ஈந்திடும்
மகிமையாய் அருள் செய்யும்
மங்காத புகழ்பெற்ற
மழலைச் செல்வம் அருளும்
மங்கையர் திலகமே
திருக்கல்யாண தாயே நீ வாழ்க

–**ஜோஸ்பின் மேரிதாசன்,**
கவரப்பேட்டை



## அமைதியின் சக்தி

வீணான கதைப்பேசி
விரயமாக்கும் நேரத்திலே
விவிலியம் எடுத்துப்படி!
விடிவெள்ளியாய் பிரகாசிப்பாய்!!
பிறரை குறைச் சொல்லி
பிரிக்கும் மணிப்பொழுதினிலே
புனிதரின் தியாக வாழ்வை
புவியிலே நினைத்து வாழ்ந்திடு!
நீண்ட பேச்சில் பாவமுண்டு !
நினையாத நேரத்தில் முடிவுண்டு!!
நித்திய மோட்சம் அடைய
நிதமும் பிறருக்கு உதவிடு!
மௌனத்திற்கு மனவலிமையுண்டு!
மரியாளை மாதிரியாகக் கொண்டு
மனதில் வைத்து சிந்தித்து
மன அமைதியுடன் வாழ்ந்திடு

–**ஜெயந்தி சலேட்**, திசையன்விளை



# புனித சியன்னா கத்தரின்
## (1341-1390)

சியன்னாவில் பிறந்த இவள் சிறுவதிலிருந்தே ஏழைகளையும், துன்புற்றவர்களையும் மிகவும் அன்பு செய்தாள். இவளுடைய தந்தை நிறைய பீப்பாய்களில் இரசம் வைத்திருந்தார். ஒரு பீப்பாயிலிருந்த இரசத்தை ஏழைகளுக்கு வழங்க தன் தந்தையிடம் அனுமதி கேட்டு பெற்றாள். எடுக்க எடுக்க இரசம் குறையவே இல்லை. வீட்டின் பிரதான வேலைக்காரன் ஒரு மாதத்திற்கு பின் அதை திறந்து பார்த்தான். இரசம் அப்படியே இருந்தது. இவள் தனது கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்தவள். மணம் முடிக்க இவள் இணங்காததால் வீட்டிலுள்ளவர்கள் பல உபத்திரவங்கள் கொடுத்தனர். இறுதியில் பெற்றோர் இவள் விருப்பப்படியே விட்டுவிட்டனர்.




18 ம் நூற்றாண்டில் புனித சுவாமி நாதரின் மூன்றாம் சபையில் சேர்ந்தாள். கொள்ளை நோயின்போது இவள் வீரத்துடன் நோயாளிகளுக்கு சேவை செய்தாள். இரு குருக்களுக்கு புதுமையாக சுகம் பெற்றுக்கொடுத்தாள். தங்களுக்காக செபிக்க மறுத்த கல்நெஞ்சரான பாவிகளுக்காக இவள் இடைவிடாது செபித்து தவம் செய்தாள். இவள் மனந்திருப்பிய பாவிகளின் பாவசங்கீர்த்தனத்தை கேட்க போதிய குருக்கள் இல்லை.எனவே போப்பாண்டவர் இவள் சுகப்படுத்திய இரு குருக்களையும் அதற்கென நியமித்தார். அவ்விரு குருக்களும் இரவும் பகலும் பாவசங்கீர்த்தனம் கேட்டார்கள். 28 ம் வயதில் இவர் திருக்காய வரம் பெற்றாள். எனினும் கெஞ்சிக் கேட்டமையால் காயங்கள் பிறர் கண்ணில் தெரியாமல் இருக்க ஆண்டவர் வரமளித்தார். இவளுக்கு பயங்கரத்துக்குரிய பாவ சோதனைகள் வந்தது. நரக பாதாளத்தில் தான் விழஇருப்பதாக நினைப்பாள்! என்றாலும் செபித்து தாழ்ச்சியுடன் பணிந்த மனதுடன் கடவுள் மீது நம்பிக்கை வைத்து, வீரத்துடன் போராடி வெற்றி பெறுவாள். அவிஞன் நகரில் இருந்த போப்பாண்டவர், இவளது பெருமுயற்சியால் உரோமைக்கு திரும்பினார். போப்பாண்டவரின் வேண்டுகோளுக்கு இணங்க தனது வாழ்வின் இறுதி ஆறு ஆண்டுகளை உரோமையில் செலவழித்து, திருச்சபையின் ஐக்கியத்திற்காகவும், சீர்த்திருத் தத்திற்காகவும் தனது உயிரையே கடவுளுக்கு பலியாக கொடுத்தார்.

**– தூயவர்களின் வரலாறு**

செய்திகள் செய்திகள் செய்திகள் செய்திகள் செய்திகள் செய்திகள்

## செய்திகள்

செய்திகள் செய்திகள் செய்திகள் செய்திகள்

2012 ம் ஆண்டில் சமயம் (மதம்) சார்ந்த செய்திகள் அமெரிக்க ஊடகங்களில் அதிக இடம் பெற்றன.

உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் அதாவது சுமார் 230 கோடி பேர் கிறிஸ்தவர்கள். இஸ்லாமியர் 160 கோடிபேர். இந்துக்களின் எண்ணிக்கை 100 கோடி. புத்த மதத்தினர் 50கோடி. பழங்குடி - நாட்டுப்புற மரபினர் 40 கோடி. யூதமதத்தினர்1.40 கோடி. – (நன்றி : *வத்திக்கான் வானொலி*)



# கிச்சன் கார்னர்

# வெஜிடபிள் சமோசா



**சமோசா பட்டி செய்ய தேவையானவை**

| | | |
|---|---|---|
| மைதா மாவு | - | 200 கி |
| டால்டா | - | 100 மில்லி |
| சீரகம் | - | 1 சிட்டிகை |
| ஓமம் | - | 1சிட்டிகை |
| உப்பு | - | தேவையான அளவு |

**சமோசா மசலாவிற்கு தேவையானவை**

| | | |
|---|---|---|
| பல்லாரி | - | பெரியதாக இரண்டு |
| பச்சை பட்டானி | - | 50 கிராம் |
| உருளை | - | 200 கிராம் |
| பச்சை மிளகாய் | - | 10 எண்ணம் |
| சர்க்கரை | - | ஒரு மேஜை கரண்டி |
| மல்லித்தூள் | - | 2 மேஜை கரண்டி |
| பெருங்காயத்தூள் | - | 1/2 தேக்கரண்டி |
| எலுமிச்சை சாறு | - | 2 மேஜை கரண்டி |
| எண்ணெய், உப்பு | - | தேவையான அளவு (தாழிப்பதற்கு) |
| மல்லித் தழை | - | ஒரு சிறிய கட்டு |
| எண்ணெய் | - | 1/2 லிட்டர் (தேவைக்கேற்ப) |

(கரம் மசாலா, மிளகுத்தூள், சீரகம் ஒவ்வொரு தேக்கரண்டி)

**செய்முறை :**

முதலில் மைதாவில் டால்டா, உப்பு, தண்ணீர் சேர்த்து நன்றாக பிசைந்து தேவையான அளவில் உருண்டையாக்கி நீளவாக்கில் ( ஒரு ஜான் நீளம், 2இஞ்ச் அகலம்) தேய்த்து ஒவ்வொரு துண்டையும் இரண்டு துண்டுகளாக்கி கொள்ளவும். கடாயில் எண்ணெயை ஊற்றி நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் அவித்த பட்டாணி, பொடியாக்கிய அவித்த உருளையை போட்டு பொன்னிறத்தில் வதக்கவும், அத்துடன் உப்பு மற்றும் எல்லாவித மசாலாக்களையும் சேர்த்து நன்றாக கிளறி பெருங்காயத்தூளையும் சேர்க்கவும். மசாலா தயாரானதும் மேலே எலுமிச்சை சாறையும், மல்லித் தழையையும் போட்டு கிளறி விடவும்.

சமோசா பட்டியில் தேவையான அளவில் மசாலா எடுத்து பட்டியை கூம்புபோல் சுருட்டி அதனுள் வைத்து முக்கோண வடிவத்தில் இருக்கும் சமோசாவை தண்ணீரால் ஒட்டி , மிதமான சூட்டினால் எண்ணெயில் மொறு, மொறுவென பொரித்து எடுத்தால் சுவையான சமோசா உண்பதற்கு தயார்.


– **ஸ்டீபன்**– (காவை நீளவண்ணன்)



# குட்டீஸ் கார்னர்

டியர் குட்டீஸ், கடந்த மாத புதிர் விளையாட்டுகள் பிடித்திருந்தது என்று நிறைய குட்டீஸ்களிடமிருந்து நன்றி மடல்கள் வந்திருந்தது. இந்த வாரமும் அதே போன்று இரண்டு புதிர் விளையாட்டுகள் இடம் பெற்றிருக்கின்றன. முயற்சி செய்யுங்கள்... புதிரை விடுவியுங்கள்...

இங்கே இருக்கும் சிறு
பறவைக்கு சுதந்திரமாய்
பறக்க வழி தெரிய
வில்லையாம். எங்கே
நீங்கள் கொஞ்சம் வழிகாட்டி
விடுங்களேன் ப்ளீஸ்....








அருகில் இருக்கும் இரண்டு
படங்களுக்கும் இடையில்
குறைந்தபட்சம்

**6**

வித்தியாசங்கள்
உள்ளது.

**60** செகண்டுகளில்
கண்டுபிடியுங்கள்
பார்க்கலாம்...

- M.எல்ரோய் ராயன், மும்பை

# உண்ணலும் உணவும்... நீரும்...



1. சாப்பிடுவதற்கு முன் பிரார்த்தனை செய்யவேண்டும்.
2. பசி இல்லாத போது சாப்பிடக்கூடாது.
3. உணவில் ஆறு சுவைகள் இருக்கவேண்டும். முதலில் இனிப்பு சாப்பிட வேண்டும்.
4. நாக்கால் சுவையை ருசித்த பின்னரே விழுங்க வேண்டும். 6 சுவையும் திகட்டும் வரை உண்ண வேண்டும்.
5. சாப்பிடும்பொழுது கண்களை மூடி, உதட்டை மூடி, உதட்டை பிதுக்காமல் மென்று கூழ்போல் அரைத்து பின் விழுங்க வேண்டும்.
6. சாப்பிடுவதற்கு அரைமணி நேரம் முன்பும், பின்பும் நீர் அருந்தக்கூடாது.
7. சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் 3 முறை உள்ளங்கையால் நீரை உறிஞ்சி குடிக்க வேண்டும்.
8. குளித்த பின் 45 நிமிடத்திற்கு பிறகு மட்டுமே சாப்பிட வேண்டும். சாப்பிட்ட பிறகு இரண்டரை மணி நேரத்திற்கு குளிக்கக்கூடாது.
9. சாப்பிடும் முன் கை, கால், முகம் கழுவ வேண்டும்.
10. டி.வி. பார்த்துக்கொண்டே சாப்பிட கூடாது.
11. பேசி கொண்டே சாப்பிடகூடாது.
12. அம்மா தன் பிள்ளைகளுடன் அமர்ந்து சாப்பிட வேண்டும்.
13. கால்களை தொங்கவைத்து அமர்ந்து சாப்பிட கூடாது.
14. புத்தகம் படித்துக்கொண்டே சாப்பிடக்கூடாது.



15. முதல் ஏப்பம் வந்த உடன் சாப்பிடுவதை நிறுத்தி விட வேண்டும்.

நன்றி – **இயற்கை வாழ்வியல் மையம்**, திருச்சி

# பிறந்த நாள் வாழ்த்து!

12.4.2013 அன்று முதலாவது பிறந்த நாள் காணும்
சேசுராஜ் – ஞானமுத்து, சேசுபாலன் – சிரோன்மணி
அவர்களது பேரன்








## J.C. அந்தோணி சிரோன் பாலன்

### பல்லாண்டு வாழ்க என வாழ்த்தும் அன்பு உள்ளங்கள்...





ஞானப்பெற்றோர் :

**V. அருள்ராஜ் A. மரியசாந்தி**

பெற்றோர் :

**J. சித்திரை சகாய ராஜா C. திருக்கல்யாணி**

**மற்றும் உற்றார் உறவினர்கள்**

# பாலகங்காதர திலகர்



இந்தியப் பெருந் தலைவர்களில் ஒருவரான இவர் ரத்தினபுரியில் 23.07.1856ல் பிறந்தவர். சட்டம் படித்தவர். தம்மை முழுவதுமாக நாட்டுப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டார். மராட்டா என்ற ஆங்கி இதழையும் கேசரி என்ற மராத்தி இதழையும் தொடங்கி மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டினார். ஃபெர்குசன் கல்லூரியில் சில வருடம் சமஸ்கிருதப் பேராசிரியராகப் பணியாற்றியவர். 1889ல் காங்கிரசில் சேர்ந்தார். 1896ல் ஒரு பயங்கரப் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது இவர் நடத்திய வரிகொடா இயக்கத்தின்போது நடந்த ஒரு கொலைக்காக இவர்மீது குற்றம் சாட்டி 18மாதம் சிறைத்தண்டனை அளித்தது அரசு. 1905ல் வங்காளப் பிரிவினையை எதிர்த்து சுதேசிப் பொருள்களைப் பயன்படுத்துமாறு மக்களைத் தூண்டினார். தீவிரவாதியாக இருந்த திலகர் தமது பேச்சுக்களால் மக்களை பலாத்காரத்தில் இறங்கத் தூண்டுவதாகக் கூறி 1908ல் அரசு இவருக்கு ஆறு ஆண்டு சிறைத் தண்டனை விதித்து. பர்மாவில் உள்ள மாண்டலேயில் சிறை வைத்தது. அப்போது தான் அவர் கீதாரகசியம் என்ற அரிய நூலை எழுதினார். சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவோம் என்ற தாரக மந்திரத்தை வழங்கியவர் இவர். 31.07.1920ல் காலமானார்.

–புகழ் பெற்ற இந்தியர்கள்

# மகிழ்ச்சி இதயத்திற்கு இதமானது...


1. தானும் மகிழ்ந்து பிறருக்கும் மகிழ்ச்சியை கொடுப்பதே தானத்தில் பெரிய தானம்
கடவுளின் நினைவில் இருக்கும்போது அமைதியும் மகிழ்ச்சியும் இயல்பாக அமையும்
நமது எண்ணங்கள் தூய்மையாக இருந்தால் அகத்தின் அழகு மகிழ்ச்சியாய் முகத்தில் தெரியும்.
எல்லோரையும் நமது சகோதரர்களாக பாவித்தால் மகிழ்ச்சி என்பது எளிதாக அமையும்.
நம்பிக்கையற்ற மனிதனுக்கு மகிழ்ச்சி இருக்காது நம்பிக்கை ஆண்டில் சுயநலமற்ற நம்பிக்கையோடு வாழ்வோம் மகிழ்ச்சியை பெறுவோம்.

–**ஸ்டீபன் ராஜ்** (த.ஆசிரியர் ஓய்வு) கே.டி.சி நகர், பாளை.

## இதய அஞ்சலி

| | | |
|---|---|---|
| 1.சந்தணசிலுவை | கொழுந்தட்டு | 11.01.2013 |
| 2.மரிய ரோசம்மாள் | நவமுதலூர் | 09.02.2013 |

# கண்ணீர் அஞ்சலி





## அந்தோணி முத்து நாடார்
## A. புஷ்பம் அம்மாள்

### என்றும் உங்கள்
### நினைவில் வாழும்...

**மகன் : A. சிலுவை பிரகாசம்**

**மருமகள் : J. ஜோஸ்பின் அருள்சீலி**

**பேத்தி : S.J. அனி பெல்சிட்டாள்**

**மற்றும் உற்றார் உறவினர்கள்**

பொத்தக்காலன்விளை.

# ஹெல்த் கார்னர்



**1. வயிறு உப்புசத்துக்கு சீரகத்தண்ணீர்**

சீரகத்தை தினமும் உடலில் பயன்படுத்துவது உடலுக்கு நல்லது. வயிறு உப்புசமாகிவிட்டால் சீரகத்தை தண்ணீரில் போட்டு கொதிக்கவைத்து வாய்பொறுக்கும் சூட்டில் குடித்தால் சில நிமிடங்களில் வயிறு உப்புசம் நீங்கிவிடும்.

**2. நெஞ்சு எரிச்சலுக்கு கொழுப்பு நீக்கிய பால்**

நெஞ்சு எரிச்சல் ஏற்ப்பட்டால் உடனே தண்ணீர் குடிப்பதும், அவதிப்படுவதும் இயல்பு. கொழுப்பு நீக்கிய பால் அல்லது பால்பவுடரை நீரில் கரைத்து இளஞ்சூட்டில் குடித்தால் அதிக அமிலத்தை பால் உறிஞ்சுவிடும்; நெஞ்சு எரிச்சலும் நீங்கிவிடும்.

**3. ஜீரண கோளாறு நீங்க இஞ்சிச்சாறு**

ஜீரண கோளாறுக்கு இஞ்சிச்சாறு மிகச்சிறந்த மருந்து. இஞ்சியை நறுக்கி சாறு எடுத்து குடிக்கும் அளவுள்ள வெந்நீரில் கலந்து குடித்தால் அரைமணிநேரத்தில் வயிறு கோளாறு நீங்கிவிடும். வாந்தி ஏற்படும் உணர்வும் நின்றுவிடும்.

**உடல் உறுப்பின் அழகு**

- உண்மையை பேசுதல் வாய்க்கழகு
- பிரார்த்தனை செய்தல் குரலுக்கு அழகு
- கருணை காட்டுதல் கண்ணுக்கு அழகு
- தானம் செய்தல் கைகளுக்கு அழகு
- நல்லதை கேட்டல் காதுக்கு அழகு
- மனித நேயம் காட்டுதல் இதயத்திற்கு அழகு

## ஜோக்ஸ்

1. கும்பகர்னனுக்கு பிடித்த மரம் எது?
2. பேச முடியாத வாய் எது?
3. அரிச்சந்திரனுக்கு பிடித்த பிஸ்கட் எது?
4. கோழி ஏன் முட்டை போடுது?
5. மிகவும் மக்கான ஊர் எது?

**–ஜோஸ்பின்,** பொற்பை

## ஜோக்ஸ்

1. தூங்குமுஞ்சிமரம்
2. செவ்வாய்
3. ட்ரு பிஸ்கட்
4. அதுக்கு 1,2,3, தெரியாது, அதான் முட்டை போடுது
5. மாமண்டூர்

விண்ணக வாழ்வின்

# இரண்டாம் ஆண்டு நினைவு

சீரியதொரு பந்தயத்தில் ஓடினேன். ஓட்டத்தை முடித்துவிட்டேன்
விசுவாசத்தைப் பாதுகாத்தேன் (2தீமோ. 4:7-8)







பிறப்பு
**03.03.1942**

இறப்பு
**06.04.2011**

## திருமதி. M.தெரசம்மாள்

பிரிவால் வருந்தும்

கணவர் : **T.ஜான்சன்**

மகள் : **J.அலோசியஸ் புனிதா**

மருமகன்: **A.F.கிறிஸ்டோபர்**

பேத்திமார்கள் : **F.மரீனா கிறிஸ்டி**

**F.ஜுலியா தெரஸ்**

பேரன் : **F.ஜோசப் மான்போர்ட்**

அருட்தந்தை **T.பபியான் ஜோசப்**

மற்றும் குடும்பத்தார்

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்துவலம் :** 1.இறைப்பற்று 5. இன்சொல் 9. செல்வம் 13. உரையாடல் 17. சக்கரம் 21. வேலி 25. பனி

**வலமிருந்து இடம் :** 2.மகிழ்ச்சி 6.புகலிடம் 10.பொறுமை 14. உண்மை 18.பிள்ளைகள் 22. ஞானி 26.நோவா

**மேலிருந்து கீழ் :** 3.நற்பயிற்சி 7.பொன்முடி 11.நுண்ணறிவு 15. நற்பெயர் 19. திருச்சட்டம் 23.பூங்கா

**கீழிலிருந்து மேல் :** 4.மறுமொழி 8.நன்மை 12.மணிமுடி 16.கண்ணி 20. ஏழு 24. புகழ்

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

1. **D.ஜோஸ்பின் மேரிதாசன்** கவரப்பேட்டை
2. **J.சேசுதுரை ஜென்ஸி** கவரப்பேட்டை
3. **S.டோமினிக் பெனிட்டா** கவரப்பேட்டை
4. **A.அகஸ்டின் அனுஷா** கவரப்பேட்டை
5. **A.அன்னபுஷ்பம் ராஜன்** கவரப்பேட்டை
6. **S.மேரிலீலா** பொற்பை
7. **M.அமல சிறுமலர்** பொற்பை
8. **S.எட்வின் சோனியா** பொற்பை
9. **கபிரியேல் மேரி** பொற்பை
10. **S.ஜோஸ் பிரகாஷ்** பொள்ளாச்சி
11. **G.ரெஜினாள் மேரி** பொற்பை
12. **குயின் ரோஸ் பாக்கியம்** பொற்பை
13. **D. எஅந்தோனி ஏசுதாசன்** பொற்பை
14. **J. லீமா ரோஸ்** H.M. கொழுந்தட்டு
15. **அ. அமல பென்சி** கொழுந்தட்டு
16. **அ. அபிதா** கொழுந்தட்டு
17. **J.பீற்றர் ஜோசப்** சென்னை
18. **P.சந்தனத் திரவியம்** பொற்பை
19. **M.D. தேவராஜன்** வெள்ளக்கோவில்

# இந்திய நதிக்கரை நகரங்கள்

| | | |
|---|---|---|
| ஆக்ரா | - | யமுனை |
| அலகாபாத் | - | கஙகை, |
| | - | யமுனை, |
| | - | சரஸ்வதி |
| | (திரிவேணி சங்கமம்) | |
| அயோத்தியா | - | சரயு |
| கல்கத்தா | - | ஹுக்ளி |
| ஹரித்துவார் | - | கங்கை |
| லக்னோ | - | கோமதி |
| நாசிக் | - | கோதாவரி |
| ஶ்ரீநகர் | - | ஜீலம் |
| திருச்சிராப்பள்ளி | - | காவேரி |
| திருநெல்வேலி | - | தாமிரபரணி |
| விஜயவாடா | - | கிருஸ்ணா |
| ஹைதராபாத் | - | மீயூசி |
| பத்ரிநாத் | - | கங்கை |
| டில்லி | - | யமுனை |
| கான்பூர் | - | கங்கை |
| சூரத் | - | தப்தி |
| கும்பகோணம் | - | காவேரி |
| வாரணாசி | - | கங்கை |
| ஜபல்பூர் | - | நர்மதா |

## வாழ்வு தரும் வார்த்தைகள் – ஏப்ரல் – 2013

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | புனித ஹியூக் | திப. 2:14,22-33 | மத்.28:8-15 |
| 2. | புனித பனோலா பிரான்சிஸ் | தி.ப 2:36-41 | யோவா 20:11-18 |
| 3. | புனித ரிச்சார்ட் | திப. 3:1-10 | லூக். 24:13-35 |
| 4. | புனித இசிதோர் | திப 3:11-28 | லூக்.24:35-48 |
| 5. | புனித வின்செண்ட் பெரர் | தி.ப 4:1-12 | யோவா 21:1-14 |
| 6. | | திப 4:13-21 | மாற். 16:9-15 |
| 7. | பாஸ்கா ஞாயிறு - 2 | திப 5:12-16திவெ1:9-11a | |
| | | 12-13, 17-19 | யோவா 20:19-31 |
| 8. | | எசா 7:10-14,8-10 | |
| | | எபி 10:4-10 | லூக் 1-26-36 |
| 9. | | திப. 4:32-37 | யோவா 3:7b - 15 |
| 10. | | திப 5:17-26 | யோவா 3:16-21 |
| 11. | புனித ஸ்தனிஸ்லாஸ் | திப. 5:27-33 | யோவா 3:31-36 |
| 12. | | திப 5:34-42 | யோவா 6:1-15 |
| 13. | புனித முதல் மார்ட்டின் | திப 6:1-7 | யோவா 6:16-21 |
| 14. | பாஸ்கா ஞாயிறு - 3 | திப 5:27-32, 40b-41 | |
| | | திவெ 5:11-14 | யோவா 21:1-19 |
| 15. | | திப 6:8-15 | யோவா 6:22-29 |
| 16. | | திப 7:51-8:1a | யோவா 6:30-35 |
| 17. | | திப 8:1b - 8 | யோவா 6:35-40 |
| 18. | | திப 8:26-40 | யோவா 6:44-51 |
| 19. | | திப 9:1-20 | யோவா 6:52-59 |
| 20. | புனித ஆக்னஸ் | திப 9:31-42 | யோவா 6:60-69 |
| 21. | பாஸ்கா ஞாயிறு - 4 | திப 13:14,43-52 | |
| | | திவெ 7:9, 14b - 17 | யோவா 10:27-30 |
| 22. | | திப 11:1-18 | யோவா 10:1-10 |
| 23. | புனித ஜார்ஜ் | திப 11:19-26 | யோவா 10:22-30 |
| 24. | புனித சிக்மசிங்கன் பிதேலிஸ் | திப.12:24-13:9b | யோவா 12:44-50 |
| 25. | புனித மாற்கு | 1பேது 5:5b - 14 | மாற் 16:15-20 |
| 26. | | திப 13:26-33 | யோவா 14:1-6 |
| 27 | | திப 13:44-52 | யோவா 14:7-14 |
| 28. | பாஸ்கா ஞாயிறு - 5 | திப 14:21-27 | யோவா 13:31-33a |
| | | திவெ 21:1-5a | 34-35 |
| 29. | புனித சியன்னா கத்ரீன் | திப 14:5-18 | யோவா 14:21-26 |
| 30 | புனித ஐந்தாம் பத்திநாதர் | திப 14:19-28 | யோவா 14:27-31a |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 13 | | | | | | **2** |
| 3 | | | | | **10** | | | 18 | |
| | | | | | | | | 14 | |
| | | 12 | | | 25 | | | 11 | 4 |
| | 20 | ■ | 24 | | 27 | | | 26 | 19 |
| 15 | 29 | | | 16 | | 30 | | | |
| | | | | 22 | | | | | 7 |
| | 21 | | | | | 23 | | | |
| | 17 | | | | ■ | | | 8 | |
| | | | 6 9 | | | | 5 28 | | |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி**

**சீராக் : அதிகாரம் 45 முதல் 51 வரை**

**பாரூக் : அதிகாரம் 1 முதல் 6 வரை**

**1மக்கபேயர் அதிகாரம் 1 முதல் 9வரை**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.04.2013**

## இடமிருந்து வலம்

1. மோசேயைப் போலவே தூயவர் யார்?
5. எபுன்னேயின் மகன் யார்?
9. அமைதியான காலத்தில் அரசாண்ட மன்னன் யார்?
13. எந்தத் தலைவருக்கும் அஞ்சாதவர் யார்?
17. நிலத்திலிருந்து மேலே எடுத்துக்கொள்ளப் பெற்றவர் யார்?
21. தூயவரிடமிருந்து எனக்கு..........................கிடைத்தது.
25. அங்கே குழலும் .......................ஒலிக்கவில்லை.
29. யோனாத்தானின் சகோதரன் யார்?

## வலமிருந்து இடம்

2. தலைப்பாகை மீது என்ன இருந்தது?
6. துயில் கொண்ட பின்னரும் இறைவாக்கு உரைத்தவர் யார்?
10. தன் அறிவுரையால் மக்களை கிளர்ச்சி செய்யத்தூண்டிவிட்ட மன்னன் யார்?.
14. யாருடைய ஆட்சியில் சனகெரிபு படையெடுத்து வந்தான்?
18. தலைமைக் குரு சீமோனின் தந்தை யார்?.
22. மத்தத்தியாவின் மகன் யார்?
26. எம்மாவுக்கு தென்புறத்தில்....................... அமைத்தார்.

## மேலிருந்து கீழ்

3. எலயாசா மகன் யார்?
7. நல்லுறவுப் பணியிலிருந்து பிரிக்கப்படுவது எது?
11. எரோபவாம் யாருடைய மகன்?
15. வலக்கையின் கணையாழி போலத் திகழ்ந்தவர் யார்?
19. சீராக்கின் மகன் யார்?
23. சிரியாவின் படைத்தலைவன் யார்?
27. பலிபீட அர்ப்பணிப்பு விழா எத்தனை நாள் கொண்டாடப்பட்டது?
30. யோனாத்தான் மிக்மாசில் குடியேறி மக்களுக்கு ...............வழங்கத்தொடங்கினார்..

## கீழிருந்து மேல்

4. போரில் வல்லவராய் இருந்தவர் யார்?
8. சிங்கங்களுடன் விளையாடியவர் யார்?
12. நெருப்பு போல எழுந்த இறைவாக்கினர் யார்?
16. யாருடைய நினைவு பெருமைக்குரியது?
20. உமது ........................எங்களை விட்டு நீங்கட்டும்.
24. தொரிமேனின் மகன் யார்?
28 சீயோன் மலையைக் காக்க யூதா எதை நிறுத்தினார்?.